பிராகுயி மொழியும் திராவிட மொழிகளும்

சென்ற இதழ் தொடர்ச்சி...

• நசீர் ஷாகிர் பிராகுயி நேர்கண்டவர்: பரமேஸ்வரன் வெங்கடாசலம்

மொழியியல் ஆராய்ச்சியில் பிராகுயி மொழியைப் பற்றிய தற்போதைய ஆராய்ச்சித் தலைப்புகள் அல்லது திட்டங்கள் எவை?

பாகிஸ்தான் மற்றும் பிற நாடுகளின் அறிஞர்கள், பிராகுயி மொழியில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த வேலைகளில் ஈடுபட்ட முக்கிய நிறுவனங்களில் International School Of Dravidian Linguistics (ISDL), Dravidian Linguists Association (DLA) (கேரளா) ஆகியவை அடங்கும். இந்த அமைப்புகள் பிராகுயி மொழியியல் புலத்தில் நவீன பரிணாமத்தைத் தூண்டும் முயற்சியில் உள்ளன. ஜூன் 26, 2009 அன்று மறைந்த பிரபலமான அறிஞர் சுப்ரமண்யம் குறிப்பிடத்தக்க பங்களிப்பாளராக இருந்தார். தற்போதைய அறிஞர்களில் முனைவர் ஜி.கே. பணிக்கர், முனைவர் நடுவட்டம் கோபாலகிருஷ்ணன் ஆகியோர் முக்கியமானவர்களாக உள்ளனர். இந்த அறிஞர்கள் பிராகுயி மொழியில் புதுமையான மொழியியல் ஆராய்ச்சிகளை முன்னெடுத்துள்ளனர்., முனைவர் ஜி.கே. பணிக்கர், பிராகுயி மொழியின் மேல் மிகுந்த அக்கறை கொண்டவராகப் பாராட்டப்பட்டவர். அவர் விரிவான மொழியியல் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, பிராகுயி மொழியை சர்வதேச அளவில் அறிமுகப்படுத்தியுள்ளார். அவரது ஓர் முக்கிய சாதனை ISDL மையத்தின் மூலம் உலகின் மொழியியலார்களை ஒன்றிணைத்தது. இது ஒரு முக்கியமான நிகழ்வு என்று கருதப்படுகிறது. 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் 5 அன்று DLA, ISDL சார்பாக அவர் பிராகுயி கலாச்சார நாளை சர்வதேச அளவில் கொண்டாடினார்.

மௌனஜோ-தரோவின் முன்னாள் இயக்குநர், மதிப்புக்குரிய பேராசிரியர் அப்சல் குல் பிராகுயி, தமிழின் முக்கியமான 'திருக்குறள்' நூலை பிராகுயி மொழியில் மொழிபெயர்த்தார். இந்த மொழிபெயர்ப்பில் முனைவர் ஜே. ரவிகுமார் ஸ்டீவனும் ஒரு முக்கிய பங்கு வகித்தார்.

பிராகுயி மக்களும் தங்களை திராவிட மரபினராக அடையாளம் காண்பதுடன், மற்ற திராவிட மொழிபேசும் மக்களுடன் தங்கள் தொடர்புகளை வலுப்படுத்த முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

மொழியியல் புலத்தில் பிராகுயி ஆராய்ச்சியில் சாதனை புரிந்த உலகப் புகழ்பெற்ற திராவிட மொழியியல் அறிஞர்களாக, சான்போர்ட் பி. ஸ்டீவர் (Sanford B. Steever), சுரேஷ் கோலிசாலா (Suresh Kolichala), ஜி.கே. பணிக்கர் (G.K. Panikkar), ரெஹ்மான் பார்த் (Rehman Fard), அனுஷி (Anushi), முனைவர் மசாடோ கோபயாஷி (Dr. Masato Kobayashi), முனைவர் திம்மிகா (Dr. Dhimmika),முனைவர் சுப்பிரமணியம் விருதாசலம் (Subramaniyam Virudhachalam), பெகி மோகன் (Peggy Mohan), கே.எம். மித்ரேய் (K.M. Mitrey), முனைவர் கோண்ட்வானா ஷா (Dr. Gondwana Shah) ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்கள் திராவிட மொழியியல் ஆராய்ச்சிக்கு முக்கிய பங்களிப்புகளைச் செய்தவர்கள்.

மதிப்புக்குரியவர்களான முனைவர் அப்துல் ரசாக் சபிர், முனைவர் லியாகத் சன்னி, முனைவர் சொசான் பிராகுயி, அஃப்சல் குல் பிராகுயி, முனைவர் கையூம் பெதார், சுல்தான் அகமது ஷாஹ்வானி, முனைவர் ஹபீஸ் சர்ப்ரா ஆகியோர், பிராகுயி மொழியில் முக்கியமான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பிராகுயி மொழியியல் ஆராய்ச்சியாளராக உங்களை ஊக்குவித்தது எது? உங்களின்

மிகவும் சுவாரஸ்யமான கண்டுபிடிப்புகள் என்ன?

நான் 1990ஆம் ஆண்டு பிராகுயி இலக்கியத்தில் பங்களிப்பைத் தொடங்கினேன். 1994ஆம் ஆண்டில் பிராகுயி மொழியியல் ஆராய்ச்சியில் கவனம் செலுத்தத் தொடங்கினேன். இதுவரை, பிராகுயி மொழியின் மூலங்கள் குறித்த பெரும்பாலான ஆராய்ச்சிகள், திராவிட மொழிகளுக்குப் புறம்பான ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் இது பெரும்பாலும் மொழியியல், அறிவியல் சார்ந்ததாக இருக்கிறது. உள்ளூர் அளவில், இந்த முயற்சிகள் பெரும்பாலும் வரலாற்று ஆராய்ச்சிகளால் தூண்டப்பட்டுள்ளன; ஆனால், அவற்றில் அரசியல் காரணங்களின் தாக்கம் மிக அதிகமாக உள்ளது.

பிராகுயி, தமிழ் சமூகங்களுக்கு இடையே எந்த பண்பாட்டுப் பரிமாற்றங்கள் இருந்து வருகின்றன?

3,500 ஆண்டுகளில் பிராகுயி, தமிழ் பேசும் மக்களுக்கிடையில் தொடர்பு இல்லாவிட்டாலும், பழமையான வரலாற்றுச் தொடர்பின் அடிப்படையில் இணைப்பு இன்னமும் காணப்படுகிறது. உதாரணமாக, காளை இரு கலாச்சாரங்களிலும் மதம் சார்ந்த, விவசாய, வணிக மற்றும் பயணம் தொடர்பான சூழல்களில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

தமிழில், காளை கடுவு (Katuvu), கட (Kata), கடாய் (Katay), கிடா (Kita) என அழைக்கப்படுகிறது. இந்த தமிழ்ச் சொற்கள், சிறிய ஒலிப் மாற்றத்துடன், பிராகுயி மொழியில் Xaras அல்லது Khras ஆக பயன்படுத்தப்படுகின்றன. தமிழ் கலாச்சாரம், பிரசித்தி பெற்ற காளை திருவிழா, சல்லிக்கட்டு, ஏறு தழுவுதல், மஞ்சு-விரட்டு என்று கொண்டாடுகிறது. இந்த விழா பூர்வ தமிழ் காலத்துக்கு முந்தியது. மதுரைக்கு அருகிலுள்ள குகை ஓவியங்கள், கி.மு. 1500 காலத்தில் தமிழர் ஒரு காளையை அடக்க முயற்சித்ததை காட்டுகின்றன. இந்த ஓவியக் கலை, சிந்து சமவெளி நாகரிகத்தின் மேல் ஏற்பட்ட Indo-European படையெடுப்புகள் காலத்துடன் இணைக்கப்படுகிறது.



அதேபோல, பிராகுயி கலாச்சாரத்தில், காளை விவசாயம், மதம், வாணிபம், மிருகபலி, பயணம் பாரங்கள் சுமந்து செல்லுவது போன்ற சூழல்களில் முக்கியத்துவம் பெறுகிறது. பலிமாஸ் மலைகள் பிராகுயி பகுதிகளின் அருகில், செம்பட்டைக் காளை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன; மற்றுமொரு சாஹ்ரி பகுதிகளில் வெள்ளைக் காளை ஓவியங்கள் காணப்பட்டுள்ளன. இந்த கண்டுபிடிப்புகள், பிராகுயி மக்களுக்கு காளை ஒரு முக்கியமான மரபு என்றும், அது இன்னும் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது எனக் காட்டுகின்றன.

விவசாயத்தில், காளைகளை வயல்களை உழுவதற்கும், அரிசி, கோதுமை போன்ற பயிர்களின் உமிகளை நீக்குவதற்கும் பயன்படுத்துகிறார்கள். ஒரு வரிசையில் 10 முதல் 12 காளைகள் கட்டி, பணிகளைச் செய்கின்றனர். மதத்தில் முக்கிய நிகழ்ச்சிகளின் போது, நோய்களைத் தடுக்கவும் மகிழ்ச்சியான நிகழ்வுகளைக் குறிக்கவும் காளைகளை பலி கொடுப்பது மங்களகரமானதாக கருதப்படுகிறது. பயணத்திற்கும் பாரங்கள் சுமப்பதற்கும், காளை ஒரு முக்கிய துணையாக இருக்கிறது.

பிராகுயி மொழியில், ஆண் காளை கரீகர் என அழைக்கப்படுகிறது. இது பெரும்பாலும் செம்மையாக இருக்கும். கரீகர் என்பது 'அனைத்து செயல்களிலும் திறன் வாய்ந்தது' என்று மொழிபெயர்க்கப்படுகிறது. அது பூர்வ தமிழ் சொற்களான கல், களை, கள்ளன் எனும் சொற்களின் ஒலி மாற்றமாகும். சமகால இயந்திரங்கள் பல பணிகளில் காளைகளின் பங்கைக் குறைத்துவிட்டாலும், தொலைதூர மலைப் பகுதிகளிலும் கிராம மக்களிடையேயும் காளைகள் இன்னும் அன்றாட வாழ்க்கையில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன.

தமிழ் மக்கள் கறுப்பு நிறத்தை மிகவும் மதிக்கிறார்கள். இது அவர்களின் பல கூறுகளிலும், பழமொழிகளிலும் கவிதைகளிலும் பிரதிபலிக்கிறது. அதேபோல, பிராகுயி மொழி இலக்கியத்திலும் கறுப்பு நிறத்தின் முக்கியத்துவத்தை கொண்டாடும் நூற்றுக்கணக்கான பழமொழிகள் உள்ளன. உதாரணத்திற்கு, பிராகுயி பழமொழி 'மோனா ஹனெப்னா' என்பதன் அர்த்தம் 'கறுப்பு இன்மையானது'. இது அவர்கள் கலாச்சாரத்தில் கறுப்பு நிறத்தின மதிப்பை விளக்குகிறது. பிராகுயி மொழியில் கறுப்பிற்கு 'சோசோ' என்று அழைக்கப்படுகிறது. இது ஓர் மென்மையான கறுப்பு நிறத்தைக் குறிக்கிறது. பழமையான பிராகுயி மக்கள் இலக்கியமும் கறுப்பு நிறத்தைப் போற்றும் கவிதைகளையும் கொண்டுள்ளது. இது காதலையும் பாசத்தையும் குறிக்கும் பொருத்தங்களுடன் இணைக்கப்படுகிறது. இந்த கலாச்சார பகிர்வு தமிழ், பிராகுயி மரபுகளுக்கு இடையே உள்ள தொடர்பை எடுத்துக் காட்டுகிறது.

இந்த பகிர்ந்த பண்பாட்டுத் தரத்தால் தமிழ், பிராகுயி பாரம்பரியங்கள் இடையே உள்ள இயல்பான தொடர்பை வெளிப்படுத்துகிறது.

படைக் கலப் பயிற்சி முறைகள், போர்க் கோட்பாடுகள், தற்காப்புக் கலைகள் ஆகியவற்றில் தமிழ்ப் பண்பாடு நீண்ட பெருமைமிக்க வரலாற்றைக் கொண்டுள்ளது. தமிழ்ப் படைவீரர்கள் தருமம், ஒழுகலாறு, நீதி ஆகியவற்றை கடைபிடித்தார்கள். அவர்களது போர்த்திறமைக்காக பரவலாக பாராட்டப்பட்டுள்ளனர். இதேபோல், பிராகுயி மக்களும் தமிழர்களின் போர் மரபுகள், ஒழுக்கம், போர்த்திறன் ஆகியவற்றைக் கடைப்பிடித்தனர்.

தமிழரின் தற்காப்புக் கலைகளில் சிலம்பம் முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கிறது. அதேபோல், பிராகுயி மக்கள் 'லோர் நலட்' என்ற போர் ஆயுதங்களையும் போர்முறைகளையும் பயன்படுத்தினர். தமிழ் வீரர்கள் வாள், ஈட்டி, அம்பு, வில், கத்தி ஆகிய பல ஆயுதங்களைப் பயன்படுத்தினர். இதேபோல், இவ்வாயுதங்கள் வரலாற்றில் பிராகுயி போர்வீரர்களாலும் பயன்படுத்தப்பட்டன. தமிழ், பிராகுயி அரசர்கள் தலைவர்கள் பெரும்பான்மையான போர்களில் குதிரைகளைப் பயன்படுத்தினர்.

தமிழ் இலக்கியத்தில் பல போர் கதைகள், வீரர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் நிறைந்திருக்கிறது. அதேபோல், பிராகுயி இலக்கியத்திலும் வீரர்களின் மனத்திடம், சாதனைகள், வீரம் ஆகியவற்றைப் பாராட்டும் பல போர்க் கதைகள், பாடல்கள் ஆகியவை காணப்படுகின்றன. இந்த பாடல்களைப் பெண்கள் தங்கள் தனிப்பட்ட தபல்கள் (டிரம்கள்) மூலம் பாடி கதை சொல்லும் மரபும் உள்ளது. இவை பிராகுயி வீரர்களின் சாதனைகளையும் வீரத்தையும் போற்றுகின்றன.

பிரபலமான பிராகுயி போர் வீரர்களில் மிர் உமர் ஷஹீத் பிராகுயி, மிர் பிஜார் பிராகுயி, மிர் அப்துல்லா கான் பிராகுயி, நசீர் கான் நூரி பிராகுயி, மிர் மிஹ்ராப் கான் பிராகுயி (ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்டவர்), நூரா மெங்கல் பிராகுயி, மிர் அலி தோஸ்ட் பிராகுயி சபர் கான் ஆகியோர் உள்ளனர். இக்கதைகள் தமிழ், பிராகுயி மரபுகளுக்கிடையேயான ஆழ்ந்த கலாச்சாரத் தொடர்புகளை வெளிப்படுத்துகின்றன.

பிராகுயி மக்களின் பாரம்பரிய இசை, நடனக் கலைகளை விளக்க முடியுமா? அவை தமிழ்நாட்டின் பாரம்பரிய இசை, நடனக் கலைகளுடன் எப்படி ஒப்பிடப்படுகின்றன?

பிராகுயி மொழியின் வரலாறு சுமார் 15,000 முதல் 25,000 ஆண்டுகள் பழமையானதாகும். இதனால் இதை பேசும் மக்களும் அதேபோன்று மிகப் பழமையானவர்கள். வாத் பகுதியின் பாலிமாஸ் மலைகளில், ஒரு குறிப்பிடத்தக்க ஓவியம் 5 முதல் 15 பேரைக் கொண்ட பூர்வ பிராகுயி மக்கள் குழுவாகச் சுற்றியடித்து நடனமாடும் காட்சி ஒன்றைக் காட்டுகிறது. சிவப்பு நிறத்தில் உருவாக்கப்பட்ட இந்தக் கலைப் படைப்புகள் பிராகுயி இசை, நடனத்துடன் தொடர்புடைய மிகப்பழமையான நிகழ்வுகளை அடையாளம் காட்டுகின்றன.

பிராகுயி மொழியில், நடனம் 'சாப்ப்' என அழைக்கப்படுகிறது. 'சாப்ப்' என்ற சொல்லின் மூலப்பொருள், பூர்வ திராவிட அல்லது தமிழ் சொல்லான 'சாப்' என்பதிலிருந்து பெறப்பட்டது. சுவாரஸ்யமாக, இந்த 'சாப்ப்' என்ற சொல் இன்னும் தமிழ் உள்ளிட்ட பல திராவிட மொழிகளில் பயன்படுத்தப்படுகிறது, இது பிராகுயி, தமிழ் கலாச்சாரங்களுக்கிடையிலான நீண்டகால மொழியியல் தொடர்பைக் காட்டுகிறது.

Clapping Hands

Tamil	:	Cappani
Kota	:	Capat
Kannada	:	Capparisu, Cappali, Cappale
Tulu	:	Cappali
Telugu	:	Cappata
Naiki	:	Chapat

இந்த எல்லா மொழிகளிலும், 'சாப்ப்' என்ற சொல்லின் மையப் பொருள் 'கை தட்டுதல்' என்பதை குறிக்கிறது. ஆனால், பிராகுயி மொழியில், 'சாப்ப்' என்பது தனித்துவமாக 'நடனம்' என குறிப்பிடப்படுகிறது. குறிப்பாக, இந்த அர்த்தம் பாகிஸ்தானின் மற்ற எந்த மொழியிலும் இல்லை. பாலோச்சியைத் தவிர, அங்கு இந்த சொல் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், பாலோச்சி மொழி 'சாப்ப்' என்ற சொல்லை பிராகுயி மொழியிலிருந்து எடுத்துக்கொண்டது.

Persian	Raqs, Raqseedan
Kurdish	Seh Ma
Pashto	Naza
Balochi	Chaap/Naach

பிராகுயி மொழியில் இந்தோ-இரானிய மொழியின் தாக்கம் இருப்பதால், இந்தோ-இரானிய மொழிச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. பாலோச்சி மொழியில், Nach அல்லது Naach என்பது நடனத்தைக் குறிக்கும். இந்தச் சொல் பிராகுயி மொழியிலிருந்து பெறப்பட்டது. ஏனெனில் Naach என்பது திராவிட மூலங்களிலிருந்து தோன்றியது. இந்தச் சொல் இன்று பல திராவிட மொழிகளில் தொடர்ந்து பயன்படுத்தப்படுகிறது, உதாரணமாக:

To Walk, Go, Pass, Proceed, Happen

Tamil	:	Nata, Natakkai, Natattu
Malto	:	Natakka
Kota	:	Narv, Nard, Nart
Toda	:	Nar
Kannada	:	Nada
Kodagh	:	Nada
Tulu	:	Nadapuni
Telugu	:	Nada, Nadaka

இந்த வார்த்தை 'நடத்துதல்,' 'செல்லுதல்,' 'கடந்து செல்,' அல்லது 'கால் மூலம் ஏதேனும் செயல்பாடு செய்' போன்ற பொருள்களைக் குறிக்கிறது. பிராகுயியில் 'நட்' என்ற சொல் 'கால்' எனப் பொருள்படும். இது அதிலிருந்து பெறப்பட்டது. இதன் விளைவாக, உருது, சிந்தி, ஹிந்தி போன்ற மொழிகள் 'நட்' ஐ 'நாட்' என்ற வடிவத்தில் ஏற்றுக்கொண்டன. இதிலிருந்து 'நடனம்' என்ற வார்த்தை தோன்றியது. இன்று, பாகிஸ்தான், இந்தோ-யூரோப்பிய மொழிகளில், 'நாச்' என்ற வார்த்தை 'நடனம்' என்பதற்குப் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது. இது 'பூர்வ திராவிட' அல்லது 'பூர்வ தமிழ்' மூலங்களுடன் ஒத்துப்போகிறது. பிராகுயி மொழியிலிருந்து இந்த வார்த்தையை பாலோச்சி, சிந்தி, உருது, பிற மொழிகள் ஏற்றுக்கொண்டன.

பிராகுயி நாட்டுப்புற பாடல்களில், 'லே', 'லா', 'டே' போன்ற சிறப்பான சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவையும் திராவிட மூலம் கொண்டவை. இசையில் அடிப்படை ஒலிகள் 'Sa', 'Re', 'Ga', 'Ma', 'Pa', 'Da', 'Ni', 'Sa' ஆகியவை மிகப் பெரிய முக்கியத்துவம் பெற்றவை. இந்த சொற்களும் பூர்வ பிராகுயி அல்லது பூர்வ தமிழ் பாரம்பரியத்தைச் சேர்ந்தவை.

பிராகுயி இசைப் பாரம்பரியங்களில் இசைக்கருவிகள்; குறிப்பாக தேங்காயம், சிறிய தேங்காயம் காணப்படும். இவற்றின் தாள ஒலியான 'டாம் டாம்' பூர்வ திராவிட மூலத்தில் ஆழமாக ஊன்றி உள்ளது.

பிராகுயி சமூகத்தால் கொண்டாடப்படும் முக்கிய திருவிழாக்கள் எவை?

பூர்வ திராவிட அல்லது பூர்வ பிராகுயி திருவிழாக்கள், பிராகுயி மக்கள் படிப்படியாக இஸ்லாமுக்கு மாறிய பின்னர் நிறுத்தப்பட்டன. இன்று, கொண்டாடப்படும் திருவிழாக்கள் இஸ்லாமிய பாரம்பரியங்களுக்கு உட்பட்டவை. அதாவது ஈது உல் அத்ஹா, ஈது உல் பித்ர், ஷாபே பாரத், முஹர்ரம், பிற திருவிழாக்கள்.

பிராகுயி மொழி பேசும் பகுதிகளின் பாரம்பரியத்தில் ஹரப்பா நாகரிகத்தின் தாக்கம் எவ்வாறாக இருந்தது?

ஹரப்பா, மோகன்ஜதாரோ, மெஹர்கர் ஆகிய தொன்மை நாகரிகங்கள், பிராகுயி மக்களுக்கு மிகவும் முக்கியமானவை. இந்த நாகரிக மையங்களைப் பூர்வ பிராகுயி மக்களின் முன்னோர்கள் நிறுவினர். பிராகுயி மொழி, பூர்வ திராவிட அல்லது பூர்வ தமிழ் மொழியில் இருந்துதான் வந்தது. ஏனெனில் அது பூர்வ தமிழ் மொழியின் ஒரு வகை.

பிராகுயி பேசும் பகுதிகளில் ஹரப்பா நாகரிகத்துடன் தொடர்புடைய முக்கிய தொல்பொருள் கண்டுபிடிப்புகள் உள்ளனவா?

நிச்சயமாக! இந்தோ-சிந்து நதியருகே உள்ள நாகரிகப் பகுதிகளை அல்லது நாகரிக மையங்களை, குறிப்பாக பிராகுயி அதிகமாக வாழும் பகுதிகளில், இன்றும் காண முடிகிறது. சில எடுத்துக்காட்டுகள்: ராணா குண்டை (கி.மு. 4300) லோரலை மாவட்டம், பலோச்சிஸ்தான்; ரெஹ்மான் தேரி (கி.மு. 4000); சோஹர் அணை (கி.மு. 3800-2300) நால், குஜ்தார் மாவட்டம், பலோச்சிஸ்தான்; அம்ரி-நால் (கி.மு. 3800–2000), குஜ்தார் மாவட்டம், பலோச்சிஸ்தான்; பாதனி அணை (கி.மு. 3500–1800), கச்சி, பலோச்சிஸ்தான்; வகிர் 2 (கி.மு. 3500–1800), குஜ்தார், பலோச்சிஸ்தான்; டிக்ரி அணை (கி.மு. 3500–1800), அவாரான் மாவட்டம், பலோச்சிஸ்தான்; நௌஷாரோ (கி.மு. 2700–1800), கச்சி மாவட்டம், பலோச்சிஸ்தான்; நிந்தோ வாரி (கி.மு. 2300–2000), கலாட், பலோச்சிஸ்தான்; குல்லி கலாச்சாரம் (கி.மு. 2500–2000), கொல்வா, பலோச்சிஸ்தான்

இந்தத் தொல்பொருள் ஆராய்ச்சி மையங்களில் வாழ்ந்த மக்கள் பூர்வ பிராகுயி, பூர்வ திராவிட அல்லது தமிழ் மக்களாக இருந்தனர். இப்பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட தரவுகள், சிற்பங்களால் அலங்கரிக்கப்பட்ட செராமிக் பானைகள், இன்றைக்கும் பூர்வ பிராகுயி, தமிழ் பேசும் சமூகங்களில் காணப்படுகின்றன.

ஹரப்பா நாகரிகத்திலிருந்து பிராகுயி மொழியில் மொழியியல் தாக்கத்திற்கான ஆதாரங்கள் உள்ளனவா?

ஹரப்பா நாகரிகம், பொதுவாக சிந்து நதியருகே உள்ள நாகரிகம் (Indus Valley Civilization-Ivc) என்று அழைக்கப்படும். அதன் மொழி, பண்பாட்டுத் தன்மைகளுக்காக ஆழமாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. ஜி.ஆர். ஹண்டர், எம். விட்சல், அஸ்கோ பார்போலா, கிளைட் வின்டர்ஸ், ஜி.கே. பணிக்கர், பி.எஸ். சுப்ரமணியம், பெருமெரி கே, இராவத்தம் மகாதேவன், அன்சுமாலி பட்டா முகோபேன்டி உட்பட பல பிரபலமான அறிஞர்கள் சிந்து நதியருகே உள்ள நாகரிக மொழியை பூர்வ பிராகுயி, பூர்வ திராவிட அல்லது தமிழ் என்று அடையாளம் கண்டுள்ளனர்.

1972ஆம் ஆண்டில் கராச்சியில் நடைபெற்ற 'சிந்து த்ரூ செஞ்சுரீஸ்' (Sindh Through Centuries) கான்ஃபரன்சில் முனைவர் அஸ்கோ பார்போலா, சிந்து சமவெளி நாகரிக எழுத்து முறையை புரிந்துகொள்ள பூர்வ பிராகுயி மொழியை அறிந்துகொள்ளாமல் முடியாது என்று வலியுறுத்தினார். சிந்து சமவெளி நாகரிக மொழி பூர்வ பிராகுயி மொழியாக இருக்க வாய்ப்பு, மற்ற திராவிட மொழிகளுடன் ஒப்பிடுகையில் அதிகம் என்று அவர் உறுதியாகச் சொன்னார். இந்த முக்கியமான கருத்தை ஒதுக்கி, சிந்து அறிஞர்கள் பார்போலாவின் பார்வைகளை பெரிதும் புறக்கணித்து, சிந்து சமவெளி நாகரிக எழுத்து முறையை புரிந்துகொள்ள முரண்பாட்டான முறைகளைத் தழுவியுள்ளனர்.

பிராகுயி பேசப்படும் பகுதிகளில் ஹரப்பா நாகரிகம் வர்த்தகம், வணிகத்தில் எந்த பங்கைக் கொண்டது?

சிந்து சமவெளி நாகரிகம் (Indus Valley Civilization - IVC), பொதுவாக ஹரப்பா நாகரிகம் என அறியப்படுகிறது. இது பல மொழி, மதம், கலாச்சாரங்களைச் சேர்ந்த மக்கள் ஒருங்கிணைந்ததாக வாழ்ந்த நகர நாகரிகம் ஆகும். இதன் பெரும்பான்மையான மக்கள் விவசாயத்திலும் வணிகத்திலும் ஈடுபட்டிருந்தனர். இயற்கை மத வழிபாடுகளில் மையமாக இருந்த இந்த முன்னேறிய, அமைதியான நாகரிகம் பூர்வ திராவிட, பூர்வ தமிழ், அல்லது பூர்வ பிராகுயி என அறியப்படுகிறது. மேலும், பூர்வ சிந்தி, பூர்வ கோண்டி, பூர்வ குருக், பூர்வ மால்டோ குழுக்களும் சிந்து சமவெளி நாகரித்தில் பெரும்பான்மையானவர்களாக இருந்தனர்.

இந்த நாகரிக மக்கள் ஓமன், ஈரான், பாபிலோன், நைனிவே, சுமர், துர்க்மெனிஸ்தான், மத்திய கிழக்கு, இலங்கை, பிற நாடுகளுடன் வணிக, மத தொடர்புகளை கொண்டிருந்தனர். அரிசி, வாசனைத் திரவம், நகைகள், பேரீச்சை, துணிகள், பிராணிகள், இரும்புக் கருவிகள், பானங்கள் போன்ற பொருட்கள் நிலம், கடல் வழியாக ஏற்றுமதி செய்யப்பட்டன. இன்று கூட, பூர்வ பிராகுயி, திராவிட அல்லது தமிழ் சொற்கள், சுமேரியன், பாபிலோனியன், இந்தோ-யூரோப்பியன், ஃபீனீசியன்,

செமிட்டிக் மொழிகளில் காணப்படுகின்றன. ஆனால், இவை பெரும்பாலும் தவறாக திராவிட வழிமுறையாக இல்லாதவை என வகைப்படுத்தப்படுகின்றன. ஆனால், அது உண்மையில் பூர்வ திராவிட அல்லது தமிழ் மூலமானது.

உர் (Nasria) என்ற பழம்பெரும் நகரம், இன்று இராக் நாட்டில் அமைந்துள்ளது. ஹசரத் இப்ராஹிம் பிறந்த இடமாக குறிப்பிடப்படுகிறது. உர் என்ற வார்த்தை கிராமம், நகரம், அல்லது மனிதர்கள் வாழும் இடம் என்று பொருள்படுகிறது. மேலும் இது பிராகுயி மொழியில் உரா என நகரம், வீடு, அல்லது கிராமம் என்று உள்ளது. இந்த தொடர்பு பூர்வ பிராகுயி மக்கள் அங்கு 4,000 முதல் 4,500 ஆண்டுகளுக்கு முன்பு குடியேறியிருக்கின்றனர் எனக் குறிக்கிறது.

சுமேரியன் ஆவணம் சிந்து சமவெளி நாகரிகம் ஒரு வர்த்தக மையமாக இருந்த மெலுஹா நாகரிகத்தை அல்லது நாட்டைப் பற்றிய குறிப்புகளை கொண்டுள்ளது. சிந்தி மொழியியல் அறிஞர்கள், மெலுஹா என்ற சொல் மலாஹ் என்ற அரபுச் சொல்லுடன் தொடர்புடையது எனக் கூறுகின்றனர். இதற்குத் தோணி வலிப்பவர் அல்லது கடல் பயணி எனப் பொருள். ஆனால், சிந்து சமவெளி நாகரிகத்தின் பூர்வ திராவிட அல்லது பூர்வ பிராகுயி தன்மையைப் பொறுத்தவரை, மெலுஹா மிகவும் பூர்வ பிராகுயி அல்லது திராவிட மூலமுடையது. மெலுஹா என்ற சொல் மெலஹ்ட்டோ, மலஹா, மெலுகா, மெலுகா, மெலுஹா போன்ற பல வடிவங்களில் காணப்படுகிறது. மூல வடிவமான மெலுகா அல்லது மெலுகா, இரண்டு திராவிட அடிப்படை வேர்கள் மல (மலை), கா (பெயர்ச்சொல்) ஆகியவற்றின் இணைப்பாகும்.

திராவிட மொழிகளில்:

Tamil	:	Iya, K
Kannar	:	Da, Ya
Telugu	:	Ni, Va
Malayalam	:	Tta, Yam
Brahui	:	Ka, Kin, Na

சொற்கள் உரிச்சொல்லைக் குறிக்க பின்னொட்டுளாகப் பயன்படுத்தப்படுகின்றன. மெலுகா என்ற சொல் 'மலை மனிதர்,' 'மலைவாசி,' அல்லது 'மலைக்காரர்கள்' என்பதைக் குறிக்கிறது.

இன்றும், மலைப்பகுதிகளில் அல்லது தாழ்வான பகுதிகளில் மலியூசுப், மல்கான் முகமது போன்ற பெயர்களைக் கொண்ட பல குடியிருப்புகள் வீடுகள் ஆகியவை காணப்படுகின்றன. மெலுகா என்ற சொல்லின் 'கா' பின்னொட்டு பிராகுயி மொழியில் பெரும்பாலும் ஒலியியல் மாறுபாடாக 'ஹா' அல்லது 'க' ஆக மாறுகிறது. கிலிருந்து ஹ-க்கு இந்த ஒலி மாற்றம் பிராகுயி மொழியின் பொதுவான மொழியியல் அம்சமாகும், உதாரணமாக:

Kuluk- Hulk / Chulk Means To Shake

Taka- Taho Means Air, Wind

சுமேரிய சொல்லான மெலுகா அல்லது மெலுஹா உண்மையில் பிராகுயி சொல்லான மெலுஹாவின் ஒலியியல் மாறுபாடாகும். இந்தச் சொல் சிந்து வெளி நாகரிகத்தைக் (IVC) குறிக்க பயன்படுத்தப்பட்டது. மெலுஹா என்பது பூர்வ திராவிட, பூர்வ தமிழ் அல்லது பூர்வ பிராகுயி சொல்லாகும்.



ஹரப்பா நாகரிகத்தின் தொல்பொருள்கள் அல்லது சின்னங்கள் பிராகுயி கலாச்சாரத்தில் இன்னும் முக்கியத்துவம் பெற்றவையாக உள்ளனவா?

நிச்சயமாக! சிந்து சமவெளி நாகரிக தொல்லியல் ஆய்வாளர்கள் தொல்லியல் இடங்களில் கண்டுபிடித்த பாண்டங்கள், முத்திரைகள் மகத்தான கலாச்சார முக்கியத்துவத்தை பெற்றுள்ளன. அவற்றின் மேல் பொதுவாகக் காணப்படும் இரண்டு முக்கியமான உருவங்கள் காளை, மீன் ஆகும். காளை, நில நாகரிகத்தைக் குறிக்கிறது; மீன், நீர்நிலை நாகரிகத்தைப் பிரதிபலிக்கிறது.

இன்று, மீன் பொதுவாக மச்சி (Machhlee) என அழைக்கப்படுகிறது. ஆனால், பூர்வ பிராகுயி காலத்தில், பூர்வ தமிழ் வார்த்தையான மின் (Min) மீனிற்குப் பயன்படுத்தப்பட்டது. பிராகுயி நாட்டின் புகழ்பெற்ற மெங்கல் பழங்குடி, அல்-மின் (Al-Min) என்னும் சொற்களை, அதாவது மீனவர்கள் அல்லது மீன் வேட்டையாளர்கள் எனக் குறிக்கப் பயன்படுத்தியது. காலப்போக்கில், ஒலி வேறுபாட்டால், அந்தச் சொல் மெங்கல் (Mengal) ஆக மாறியுள்ளது.

மேலும், இந்தத் தொன்மையான இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட மண்பாண்டங்கள், மலையர்கள், பிராகுயி மக்களின் வீடுகளில் இன்னும் பயன்படுத்தப்படுகின்றன. இதன் மூலம், தலைமுறை தலைமுறையாக பண்பாட்டுத் தொடர்ச்சி இருக்கிறது என்பதை அறிகிறோம்.

ஹரப்பா நாகரிகம் – பிராகுயி மொழி, கலாச்சாரத் தொடர்புகளுக்கான தற்போதைய ஆராய்ச்சித் தலைப்புகள் அல்லது திட்டங்கள் எவை?

உண்மையாகவே உலகின் பலகல்விப்புலங்களிலிருந்து ஆய்வாளர்கள், பிராகுயி மொழி, சிந்து சமவெளி நாகரிகம் அல்லது ஹரப்பா நாகரிகத்திற் இடையேயான தொடர்பை ஆராய்ந்து வருகின்றனர். அஸ்கோ பார்போலா, அன்சுமாலி பட்டு, அஜீஸ் இங்ரேன், ஓமர் கான் போன்ற அறிஞர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

1972 ஆம் ஆண்டு, கராச்சியில் நடைபெற்ற Sindh Through Centuries Conference நிகழ்ச்சியில், முனைவர் அஸ்கோ பார்போலா, சிந்து சமவெளி நாகரிக எழுத்தை புரிந்துகொள்ள பிராகுயி மொழியின் ஆய்வு அவசியம் எனக் கூறினார். மேலும், சிந்து சமவெளி நாகரிக மொழி பிராகுயி மொழியாக இருக்க பிற திராவிட மொழிகளைவிட வாய்ப்பு அதிகமாக இருப்பதாக வலியுறுத்தினார். ஆனால், இந்த முக்கியமான அறிக்கை சிந்து அறிஞர்களால் கவனிக்கப்படாமல், அவர்கள் சிந்து சமவெளி நாகரிக எழுத்துகளைத் தவறான முறையில் விளக்க முயற்சித்தனர்.

பிராகுயி பேசும் மக்களின் மூதாதைத் தொடர்புகளை சிந்து சமவெளி நாகரிகத்துடன் (Harappan Civilization) இணைக்க மரபியல் ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளனவா? தமிழர்களின் மரபியல் ஆய்வுகளுடன் இவை எப்படி ஒப்பிடப்படுகின்றன?

பிராகுயி பேசும் மக்களின் மரபியல் தொடர்பு மிகவும் சிக்கலான, ஆர்வமூட்டும் ஒரு பொருளாகும். இவர்களின் மொழி பூர்வ திராவிட அல்லது தமிழ் ஆக இருப்பினும், இவர்களின் மரபியல் அடையாளம் பிரதானமாக திராவிடம் ஆக இல்லை. பிராகுயி மக்களின் DNA, ஆசிய மக்கள் தொகையுடன் நெருங்கிய ஒற்றுமையைக் கொண்டுள்ளது.

பிராகுயி மக்களின் மிடோக்காண்ட்ரியல் DNA (Mtdna), தென் ஆசிய மக்களில் பொதுவாகக் காணப்படும் M Haplogroup என்பதைக் கொண்டுள்ளது. மேலும், பிராகுயி மக்களில் U Haplogroup உள்ளது; இது ஈரான், மத்திய கிழக்கு, கஃப்காஸ் பகுதிகளின் மக்களிடத்தில் காணப்படுகிறது. அதற்கு மேலாக, பிராகுயி DNA, R1a, R2 Haplogroups-ஐ கொண்டுள்ளது. இது சிந்து, ஈரானிய, பாலோச்சி மக்களிடமும் காணப்படுகிறது. திராவிட ஆண்களில் அதிகம் காணப்படும் H Haplogroup, பிராகுயி மக்களிடத்தும் காணப்படுகிறது.

பிராகுயி, திராவிட மக்கள், மரபியல் குரோமோசோம்களை பகிர்ந்து கொள்கின்றனர். இது, சிந்து சமவெளி நாகரிகம், பூர்வ திராவிட நாகரிகமாக இருந்தது என்பதற்கான ஆதாரமாக உள்ளது. பிராகுயி மக்கள் பூர்வ திராவிட அல்லது பூர்வ தமிழ் என்பதால், சிந்து சமவெளி நாகரிக மக்கள் பூர்வ பிராகுயி மக்கள் என உறுதியாகக் கூறலாம்.

பிராகுயி கலாச்சாரத்தில் சிந்து சமவெளி நாகரிகத்துடன் தொடர்புடைய ஏதாவது இயற்கை கதைகள் அல்லது பாரம்பரியம் உள்ளதா? தமிழினக் கதைகள், பாரம்பரியங்கள் இதோடு எப்படி ஒப்பிடப்படுகின்றன?

சிந்து சமவெளி நாகரிகம் அல்லது ஹரப்பா நாகரிகம் தொடர்பான எழுத்தில் உள்ள ஆதாரங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இதனால் அவர்கள் பாரம்பரிய வழக்கங்கள் அல்லது இலக்கிய மரபுகள் குறித்துத் தெளிவாகக் கூற முடியாது. ஆனால், சிந்து சமவெளி நாகரிக மக்களின் மொழிகள், பூர்வ திராவிட, பூர்வ தமிழ், அல்லது பூர்வ பிராகுயி என்பது உறுதியாகக் கூறலாம். முக்கியமாக, தமிழ் இலக்கியத்தில் காணப்படும் கூறுகள், பிராகுயி பாரம்பரியக் கதைகளிலும் உள்ளன. இது படர்ந்த கலாச்சார, மொழித் தொடர்பை வெளிப்படுத்துகிறது.

ஹரப்பா நாகரிகத்தின் மத, விழா வழக்கங்கள், பிராகுயி, தமிழ் சமூகங்களின் வழக்கங்களுடன் எப்படி ஒப்பிடப்படுகின்றன?

சிந்து சமவெளி நாகரிகத்தில், அம்மன் தெய்வ வழிபாடு முக்கியமாக இருந்தது. காலப்போக்கில், இது துர்கா, பார்வதி, காளி மாதா போன்ற தெய்வங்களை வணங்குவதாக மாறியது. காளி மாதா, போரையும் சக்தியையும் குறிக்கும் தெய்வமாகக் கொண்டாடப்பட்டது. சிந்து சமவெளி காலத்தில், பின்னர் திராவிட, வேத மதங்களில், சக்தி தெய்வமாக பரவலாக மதிக்கப்பட்டது.

சிந்து சமவெளி நாகரிக மக்களும் பாம்புகளை வணங்கினர். இன்று கூட, பிராகுயி பகுதிகளில், குழ்தார் மாவட்டத்தில், நாகஹூ என்ற மலை உள்ளது. இது பழமையான திராவிட மக்களின் பாம்பு வழிபாட்டுக்கான மையமாக இருந்தது. நாக்பட் சமுதாயம், பாம்பு வழிபாட்டின் மரபைத் தொடர்ந்து கொண்டுள்ளது. பழமையான காலங்களில், பல மனிதக் குழுக்கள் தனித்துவமான மத நம்பிக்கைகளைக் கொண்டிருந்தனர். அவற்றைக் குலச்சின்னங்கள் மூலம் வெளிப்படுத்தினர். உதாரணமாக, தலைமுடியில் அணியப்படும் துர்பான் பாம்பு வழிபாட்டின் சின்னமாக இருந்தது. துர்பானின் உயர்ந்த சிறிய பகுதி, பாம்பின் முகத்தைப் போன்றது; சுழன்ற பகுதி, பாம்பின் வயிற்றைப் போன்றது; கடைசிப் பகுதி, பாம்பின் வால் போல உள்ளது. நாக்பட் மக்களின் பழமையான மதச் சின்னமாக இருந்தது. பின்னர், துர்பான் அணிவது தோன்றியது என்பதை இது காட்டுகிறது.

பிராகுயி மக்கள், பாரம்பரியமாக துர்பான்களை அணிந்து வந்தனர். பின்னர் பாலோச்சி மக்களும் இதைப் பின்பற்றினர். காலப்போக்கில், துர்பான் மதச் சிறப்புச் சின்னமாக (டோடமாக) ஆனது. பிறகு, தலைக்கவசம், தனிப்பட்ட மரியாதையின் சின்னமாக மாறியது. இது இன்று வரை தொடர்கிறது. துர்பான் கட்டுவது, பூர்வ திராவிட மத டோடமாக உள்ளது. பிராகுயி மக்கள் இஸ்லாமுக்கு மாறியபோது, அவர்கள் பழமையான திராவிட அல்லது தமிழ் மத வழக்கங்களையும் விழாக்களையும் மறந்தாலும் அந்த வழக்குகளின் சுவடுகள், அவர்களின் கலாச்சாரம், பாரம்பரியம், சிந்தனை முறைகளில் இன்னும் காணப்படுகின்றன. ●

mail to: **paramesh.india2812@gmail.com**

முடிவுரை

நசீர் ஷாகிர் பிராகுயி

நான், திரு. வெங்கடாசலம், அவரது பெருமைக்குரிய குழுவிற்கு, பிராகுயி, தமிழ் மக்களின் பழமையான தொடர்புகளைப் பற்றிய என் கருத்துக்களை பகிர வாய்ப்பு அளித்ததற்காக, ஆழ்ந்த நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பிராகுயி சமூகத்தில் ஒரு உறுப்பினராக, தமிழ்நாட்டின் மொழியியல் நிறுவனங்களும் அரசாங்கமும் தமிழ் பிராகுயி வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் உறுதியாப நடவடிக்கை எடுக்க வேண்டுமென, வலியுறுத்த விரும்புகிறேன். அப்போதுதான் உள்ளூர் பாலோச்சி அரசியல் சதிகளால், பூர்வ தமிழ் கிளையினை அழிவிலிருந்து பாதுகாக்கமுடியும்.

பரமேஸ்வரன் வெங்கடாசலம்

இந்த நேர்காணலில் பாகிஸ்தான் பிராகுயி ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் அவர்களுடன், பிராகுயி மொழி, திராவிட மொழிகள், குறிப்பாக தமிழ் முதலான திராவிட மொழிகளுக்கு இடையேயான ஆழமான மொழி, கலாச்சாரத் தொடர்புகளைப் பற்றிய பயணம் மேற்கொண்டோம். முனைவர் பிராகுயியின் நிபுணத்துவம், இந்த மொழிகளின் பண்புகள், வரலாற்று மூலங்களை வெளிச்சம் போட்டு, இந்தியாவில் திராவிட மொழி பேசுபவர்களிடையே ஒரு ஆழமான புரிதலை உருவாக்க உதவியது.

மொழித் தொடர்புகளைத் தாண்டி, தமிழ்நாடு, பிராகுயி சமூகத்திற்கிடையேயான கலாச்சார பரிமாற்றங்கள் உருவாகும் வாய்ப்பைப் பதிவு செய்தது. இந்தத் தொடர்புகள், மேலும், ஹரப்பா நாகரிகத்துடன் உள்ள சாத்தியமான வரலாற்றுத் தொடர்புகள் குறித்து நாங்கள் உரையாடியதால், வரலாற்றுக்கு ஒரு புதிய பரிமாணத்தைக் கொண்டு வந்தது. குடியேற்ற முறைமைகள், கலாச்சார வளர்ச்சி பற்றிய நமது அறிவினை மேம்படுத்தியது.

மொழியின் வளர்ச்சி பற்றி தனித்துவமான கல்விப்புலம் சார்ந்த பார்வைகளையும் புதிய சிந்தனைகளையும் கொண்டு வந்த இந்த பேச்சு, வரலாறு, மொழியியல், கலாச்சார ஆய்வுகள் மீது ஆர்வத்தை ஏற்படுத்தும். பிராகுயி மொழியின் பாதுகாப்பு, மேம்பாடு ஆகியவை பற்றிய உரையாடல்கள், செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும்.